## திருத்தங்கல் நகராட்சி
## மன்றகூட்டப்பொருள்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2045 ஹேவிளம்பி வருடம் தை திங்கள் 12 நாள் **31–01–2018** ம் தேதி புதன்கிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரணகூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.எஸ். முகம்மது சாகுல் ஹமீது, எம்.இ.,**

திருத்தங்கல் நகராட்சி
நாள் . 25–01–2018

**தனிஅலுவலர்**
**திருத்தங்கல் நகராட்சி**

**பொருள் எண்:-01**

இந்நகராட்சி 13 சதுர.கீமீ பரப்பளவு கொண்ட 55343 மக்கள் தொகை உள்ளடக்கிய நகராட்சி ஆகும். இந் நிலையில் அரசாணை எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (M.A.5) நாள்.09.08.2010ன்படி இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதற்கேற்ப அளவுகோலின்படி (Norms) அனுமதிக்கப்பட்ட பணி இடங்கள் இல்லை. ஆதலால் அளவுகோலின்படி கீழ்க்கண்ட விபரப்படியான பணியிடங்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

**பொதுப்பிரிவு**

| வ. எண் | பணியிட விபரம் | முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதற் கேற்க அளவுகோலின்படி அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | அளவுகோலின்படி கூடுதலாக தோற்றுவித்துக்கொள்ள தேவைப்படும் பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | 8 | 3 | 5 |
| 2 | காசாளர்(இளநிலை உதவியாளர்) | 1 | - | 1 |
| 3 | தட்டச்சர் | 1 | - | 1 |
| 4 | ஜீப் ஓட்டுநர் | 1 | - | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் | 2 | 1 | 1 |
| **வருவாய் பிரிவு** | | | | |
| 1 | வருவாய் உதவியாளர் ( மொத்த வரிவிதிப்புகளின் எண்ணிக்கை 22106) | 7 (3000 வரிவிதிப்புகளுக்கு ஒரு வருவாய் உதவியாளர்) | 4 | 3 |
| **பொதுசுகாதாரப்பிரிவு** | | | | |
| 1 | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 5 | 2 | 3 |
| 2 | ஓட்டுநர்கள் ( லாரி பெரியது – 1 லாரி சிறியது – 3 டம்பர் பிளேசர் லாரி – 1) | 5 | 3 | 2 |
| 3 | துப்புரவுப்பணியாளர்கள் | 92 | 36 | 56 |
| | மொத்தம் | 122 | 49 | 73 |

மேற்கண்ட அளவுகோலின் படி முதல்நிலை நகராட்சிக்கு அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடம் 122 ஆகும். இதில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடம் 49 போக மீதமுள்ள 73 பணியிடத்தை நகராட்சியின் அத்தியவாசிய தேவையினை கருத்தில் கொண்டு கூடுதலாக தோற்றுவித்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகராட்சியின் அத்தியவாசிய தேவையினை கருத்தில் கொண்டு அளவுகோலின் படி தேவைப்படும் 73 பணியிடத்தை கூடுதலாக தோற்றுவித்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. அளவுகோலின் படி கூடுதலாக தோற்றுவிக்கப்பட உள்ள 73 பணியிடத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்–02**

திருத்தங்கல் நகராட்சி, அரசாணை எண். **154**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். **09.08.2010**ன் படி முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சி **13** சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட **55362** மக்கள் தொகையை உள்ளடக்கிய நகராட்சியாகும். இந்நிலையல் சிவகாசி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்துதல் தொடர்பாக அரசு பரிசீலனை உள்ளது. மேலும் திருத்தங்கல் நகராட்சியை சிவகாசி நகராட்சியை மாநகராட்சியாவதுடன் இணைக்க சம்மதம் தெரிவிக்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

திருத்தங்கல் நகராட்சியை சிவகாசி நகராட்சி மாநகராட்சியாவதுட்ன் இணைக்க சம்மதம் தெரிவிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
(2537/2017/சி1)

**பொருள் எண்:-3**

திருத்தங்கல் நகராட்சி வ.எண். 1 முதல் 21 வரை உள்ள நீர் மூழ்கி மோட்டார்கள் 213 எண்ணம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட மோட்டார்களுக்குரிய சப் கேபிள்கள் மற்றும் பேனல் போர்டுகள் அடிக்கடி பழுது ஏற்படுவதினால் பொது மக்களுக்கு போதிய குடிநீர் கிடைப்பதில்லை. எனவே பொதுமக்களுக்கு குடிநீர் சீராக கிடைக்கும் வகையில் அவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து குடிநீர் விநியோகம் செய்யவும் மற்றும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள பேனல் போர்டுகளை திண்டு அமைத்து அவற்றில் பொருத்தி முறையாக பராமரிப்பு செய்வதற்கும் கீழ்காணும் பொருள்கள் தேவைப்படுகின்றன.

**தேவையான பொருட்கள்**

| வ. எண் | பொருட்களின் விவரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | 4 sq mm சப் கேபிள் | 1000 மீட்டர் |
| 2 | 5 HP பேனல் போர்டு | 10 எண்ணம் |
| 3 | 7.5 HP பேனல் போர்டு | 10 எண்ணம் |
| 4 | 7.5 HP D.O.L ஸ்டார்டர் | 5 எண்ணம் |
| 5 | 80 mm GI பைப் ( B' class) | 60 m |
| 6 | 80 mm GI Coupling | 20 எண்ணம் |
| 7 | 80mm x 65mm Gi Reducer | 2 எண்ணம் |
| 8 | 50mm GI Coupling | 20 எண்ணம் |
| 9 | 65mm x 50mm GI Reducer | 2 எண்ணம் |

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி விரைவில் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7.00 இலட்சம். நகராட்சி பொது நிதி மூலம் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்:-04**

திருத்தங்கல் நகராட்சியில் 213 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் திறந்த வெளி கிணறுகள் மூலம் பல்வேறு அளவுகளினாலான GI மற்றும் PVC பைப் குழாய்களின் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் குடிநீர் குழாய்களில் ஏற்படக் கூடிய பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து சீரன அளவில் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி மேற்படி குடிநீர் குழய்களை பராமரிப்பு செய்வதற்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி

மூலம் அதற்குரிய உபரி சாமன்கள் மற்றும் கூலி உட்பட மேற்படி பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பணிகள் விபரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண் 01 முதல் 10 வரை உள்ள குடிநீர் குழாய்களை பழுது நீக்கம். ( கூலி ஒப்பந்தம் மட்டும் பொருட்கள் உள்பட ) செய்யும் பணி | ரூ.10 இலட்சம் |
| 2. | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண் 11 முதல் 21 வரை உள்ள குடிநீர் குழாய்களை பழுது நீக்கம். (கூலி ஒப்பந்தம் மட்டும் பொருட்கள் உள்பட ) செய்யும் பணி<br>மேலும் வார்டு எண் 1 முதல் 21 வரை அனைத்து பகுதிகளிலும் உள்ள மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணி ( கூலி ஒப்பந்தம் மட்டும்) | ரூ.10 இலட்சம் |

மேற்படி பணிகளை பொதுநிதித் திட்டம் 2017-2018-ன் கீழ் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் அனுமதிக்கு

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்:-05**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் 04.01.2018-ம் தேதிய கடிதத்தின் படி (ந.க.எண்.2920/2014/அ4 நாள். 04.01.2018) திருத்தங்கல் நகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016-ல் கூறியுள்ளவாறு குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பையாக பிரித்து வழங்குவது குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் ஸ்டிக்கர் ஏதேனும் ஒரு கூட்டுறவு நிறுவனம் மூலம் அச்சிட்டு வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைபுள்ளி கோரியதையும் மன்றம் அங்கிகரிக்கலாம்.

**(ந.க.எண்.122/2018/2018/எச்1)**

**பொருள் எண்:** 06

திருத்தங்கல் நகராட்சி பகுதிகளில் பொது மக்களிடையே மக்கும் குப்பை மக்கதாத குப்பை என பிரித்து வழங்குவது குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் அச்சிட்டு வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பொற்றுள்ளது

| வ.எண் | விபரம் | மல்டி கலர் நோட்டீஸ் ரூ.20000-க்கு | மல்டி கலர் ஸ்டிக்கர் ரூ.15000-க்கு |
|---|---|---|---|
| 1 | Arumbakkam Statmarces & Printing Service Indus Co-Operrative society Ltd. | 89600/- | 265500/- |
| 2 | Vellore Stationeries & Printing Service Indus co-operative society Ltd., | 91000/- | 267000/- |
| 3 | Porur Stationeries & Printing Service Indus co-operative Society Ltd., | 92000/- | 268000/- |

**அலுவலகக் குறிப்பு:-**

மேற்கண்ட விலைபுள்ளியில் மிக குறைந்த விலைபுள்ளி மதிப்பளித்த Arumbakkam Stationeries Printing Service Indus Co-operative Society Ltd.,

Chennai என்ற நிறுவனம் மூலம் 5000 எண்ணம் மல்டிகலர் ஸ்டிக்கர் வாங்க அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.22/2018/2018/எச்1)**

**பொருள் எண்:-07**

திருத்தங்கல் நகராட்சி பொது மக்களுக்கு மனித கழிவுகளை சாக்கடையில் விடக் கூடாது, மனித கழிவுகளை மனிதனே அகற்ற கூடாது மற்றும் சுகாதாரமற்ற கழிப்பிடங்களை சுகாதாரமான கழிப்பிடமாக மாற்ற வேண்டும் என்பது குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடையே தினத் தந்தி நாளிதழிலில் வெளியிட்டமைக்கு தினத் தந்தி நாளிதழிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. ( எண். MDU/1718-0016540 நாள்: 14/012018) மேற்படி பட்டியல் தொகை ரூ.12852/- மட்டும் தினத்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.498/2018/எச்1)**

**பொருள் எண்:-08**

திருத்தங்கல் நகராட்சி பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு ஏற்படுத்த டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு விளம்பரம் செய்தமைக்கு தினகரன், தமிழ் முரசு நாளிதழிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை தமிழ் முரசு நாளிதழுக்கு ரூ.12138/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.424/2018/எச்1)**

**பொருள் எண்:-09**

இந்நகராட்சிக்கு 2018-2019ம் ஆண்டுற்கு தேவைவயான படிவங்கள், பதிவேடுகள், எழுதுப்பொருட்கள் மற்றும் கணினி டோனர் ஆகியவைகளை வாங்கவேண்டியது அத்தியாவசியமாக உள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1649/2017/சி1)**

**பொருள் எண்:-10**

இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு **2018–19**ம் ஆண்டிற்கு தேவையான அரிசி, மளிகைப் பொருட்கள், பால் கேஸ், காய்கறிகள் மற்றும் மகளிர் குழுவிற்கு வழங்க வேண்டிய ஊதியம் ஆகியவற்றிற்கான உத்தேச செலவினம் ரூ. **50,00,000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 155/2014/அ1**

**பொருள் எண்:-11**

இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு **2018–2019** ம் ஆண்டிற்கு தேவையான அரிசி, பால், கேஸ் ஆகிய பொருட்களை கீழ்கண்ட விவரப்படியான அரசு துறை சார்ந்த நிறுவனங்களில் நேரடி கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விவரம் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் | அரிசி |
| 2. | விருதுநகர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் | பால் |
| 3. | இண்டேன் நிறுவனம் | கேஸ் |

அலுவலகக் குறிப்பு–
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.155/2014/அ1

**பொருள் எண்:-12**

திருத்தங்கல் நகராட்சி தூய்மை இந்திய திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பிடம் கட்டுவதற்கு பணியின் அவசர அவசியம் கருதி பயனாளிகள் ஒப்பந்தகாரர்கள் மூலம் தனி நபர் கழிப்பிடம் கட்டி முடித்துள்ளார்கள், ஆதலால் தனிநபர் கழிப்பிடம் கட்டி முடித்தவர்களுக்கான மான்யத் தொகை ரூ.8000/- சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கலாம் என ரூ.20/- பெறுமானமுள்ள முத்திரை தாளில் உறுதி மொழி ஆவணம் எழுதி சமர்பித்துள்ளனர். ஆதலால் மேற்படி பணிகளை கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் மூலம் செய்து முடித்துள்ளார்கள். எனவே பயனாளிகள் எழுதி கொடுத்துள்ள உறுதி மொழி ஆவணத்தின் அடிப்படையில் ஏற்கனவே தனி நபர் கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டதற்கு சம்மந்தப்பட்ட பயனாளிகள் மற்றும் பயனாளிகள் தெரிவித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்கியதையும், மேலும் தனி நபர் கழிப்பிடம் கட்டி முடித்து பட்டியல் தொகை வழங்க தயார் நிலையில் உள்ளதையும் இனிமேல் தனி நபர் கழிப்பிடம் கட்டுவதற்கு அதற்கான மான்ய தொகை பயனாளிகள் தெரிவித்துள்ள கீழ்கண்ட ஒப்பந்தகாரர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. திருமதி. மகேஸ்வரி
2. திருமதி. சரஸ்வதி
3. திருமதி. பாக்கியம்
4. திரு.கார்த்திக்
5. திரு.முருகவேல்
6. KSP. கணேசன் செரிட்டி டிரஸ்ட்

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி பயனாளிகள் எழுதி கொடுத்துள்ள ரூ.20/- பெறுமானமுள்ள முத்திரை தாளில் எழுதி கொடுத்துள்ள உறுதி மொழி ஆவணத்தின் அடிப்படையில் ஏற்கனவே தனி நபர் கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டதற்கு சம்மந்தப்பட்ட பயனாளிகள் மற்றும் பயனாளிகள் தெரிவித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்கியதையும், மேலும் தனி நபர் கழிப்பிடம் கட்டி முடித்து பட்டியல் தொகை வழங்க தயார் நிலையில் உள்ளதையும் இனிமேல் தனி நபர் கழிப்பிடம் கட்டுவதற்கு அதற்கான மான்ய தொகை பயனாளிகள் தெரிவித்துள்ள கீழ்கண்ட ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2126/2016/எச்1)**

**பொருள் எண்:-13**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதித்திட்டம் 2017-2018 ன் நகர் மன்ற தீர்மான எண் 285 நாள்.28.12.2017-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு கீழ்கண்ட பணிக்கு 28.01.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத் தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஓப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** வ.எண் 18 சுக்கிரவார் பட்டி ரோடு வண்ணாங்குளம் மாயனம் அருகில் உள்ள கழிப்பறைக்கு பழைய போர்வெல் தூர்வாறுதல் , புதிய போர்வெல் அமைத்தல், கருப்பசாமி நகர், முனியசாமி நகர் மற்றும் சரஸ்வரி நகர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் Flushing மற்றும் Deeping செய்யும் பணி | 6.00 | திரு. எம்.ஐயப்பன் மதுரை | **0.18%** குறைவு |
| | | | திரு.எம்.கண்ணன் மதுரை | 0.36% குறைவு |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.36% குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.கண்ணன் மதுரை அவர்களின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு—</u>**

அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண் : 2001 /2017/இ1)**

**பொருள் எண்:-14**

இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு 2018-19 -ம் ஆண்டிற்கு தேவையான காய்கறி மற்றும் மளிகைப் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு 25.01.2018 -ம் தேதி வரை விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**1.காய்கறிகள்:-**

| வ.எண் | பொருட்களின் விவரம் | சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர் கூட்டுறவு சேவை சங்கம் தூத்துக்குடி கொடுத்துள்ள 1 கிலோவிற்கான விலை விகிதம் | திருநெல்வேலி மாவட்ட ஒப்பந்த தொழிலாளர் கூட்டுறவு சேவை திருநெல்வேலி 1 கிலோவிற்கான விலை விகிதம் | தந்தை பெரியார் ஒப்பந்த தொழிலாளர் சேவை கூட்டுறவு சங்கம் சங்கரன் கோவில் கொடுத்துள்ள 1 கிலோ விற்கான விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. | பூசணி | 22 | 27 | 25 |
| 2. | தக்காளி | 70 | 80 | 75 |
| 3. | பல்லாரி | 72 | 77 | 75 |
| 4. | கத்தரிக்காய் | 85 | 92 | 88 |
| 5. | கேரட் | 75 | 80 | 77 |
| 6. | அவரை | 90 | 95 | 92 |
| 7. | முருங்கை | 60 | 65 | 62 |
| 8. | உருளைக் கிழங்கு | 48 | 52 | 50 |
| 9. | மாங்காய் | 88 | 95 | 90 |
| 10. | இஞ்சி | 160 | 170 | 165 |
| 11. | மிளகாய் | 100 | 125 | 120 |
| 12. | கறிவேப்பில்லை | 50 | 75 | 70 |
| 13. | மல்லி | 100 | 125 | 120 |

**2.மளிகைப்பொருட்கள்**

| வ.எண் | பொருட்களின் விவரம் | சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர் கூட்டுறவு சேவை சங்கம் தூத்துக்குடி கொடுத்துள்ள 1 கிலோவிற்கான விலை விகிதம் | திருநெல்வேலி மாவட்ட ஒப்பந்த தொழிலாளர் கூட்டுறவு சேவை திருநெல்வேலி 1 கிலோவிற்கான விலை விகிதம் | தந்தை பெரியார் ஒப்பந்த தொழிலாளர் சேவை கூட்டுறவு சங்கம் சங்கரன் கோவில் கொடுத்துள்ள 1 கிலோ விற்கான விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. | உருட்டு உளுந்து | 98 | 110 | 100 |
| 2. | துவரம் பருப்பு | 98 | 120 | 110 |
| 3. | ச.எண்ணெய் | 96 | 110 | 100 |
| 4. | உப்பு | 10 | 15 | 11 |
| 5. | மஞ்சள் பொடி | 196 | 200 | 198 |
| 6. | சீரகம் | 380 | 385 | 382 |
| 7. | பூண்டு | 110 | 115 | 112 |
| 8. | வத்தல் | 105 | 115 | 110 |
| 9. | சாம்பார் பொடி | 360 | 370 | 365 |
| 10. | பெருங்காயம் | 1350 | 1420 | 1400 |
| 11. | கடுகு | 100 | 130 | 120 |
| 12. | வெந்தயம் | 100 | 130 | 120 |
| 13. | புளி | 225 | 250 | 240 |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர் சேவை தொழில் கூட்டுறவு சங்கம் தூத்துக்குடி அவர்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்கலாம்.
2. செலவினம் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.155/2014/அ1)**

**பொருள் எண்:-15**

திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளையும் கட்டிடங்கள் மற்றும் மக்கள் தொகைக்கு ஏற்ப வார்டு மறுவரையறை செய்ததின் படி வரைப்படம் தயார் செய்து கொடுப்பதற்க செலவு தொகையாக உத்தேச செலவு தொகை ரூ. 2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1821/2017/இ1

தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி